# அறிவித்தல்

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் (பதிலாள் இன்றிய அடிப்படையில்)

**தேர்தல் ஆணைக்குழு,**
**சரண மாவத்தை, இராஜகிரிய**

தற்போது வெற்றிடம் ஏற்பட்டுள்ள மேற்கூறிய பதவியில் 03 வெற்றிடங்களுக்கு அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**வயதெல்லை :** 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**கடமையின் தன்மை :**

- மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்கள் யாவும், தேர்தல் ஆணைக்குழுவின் இராஜகிரியவில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவில் நிலவுகின்றன. ஆகையால், கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் விண்ணப்பகாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

- தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் வீ.பீ.என். வலையமைப்பு, மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள கணினி வலையமைப்புகளையும் சம்பந்தப்பட்ட கணினி உபகரணங்களையும் உரிய முறையில் பராமரிப்பதில் உதவுதல்.

- தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவினால் விருத்திசெய்யப்பட்டுள்ளதும் வெளித் தரப்புகளினால் விருத்திசெய்து பராமரிக்கப்படுவதுமான கணினி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னேற்றுதில் உதவுதலும் பராமரிப்பு அலுவல்களை நிறைவேற்றுதலும்.

- தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புதிய கணினி முறைமைகளை விருத்திசெய்வதில் உதவுதலும் அவற்றைப் பராமரித்தலும்.

- இதுதவிர, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக்குறிப்பின் 04 மற்றும் முதலாம் அட்டவணையின் இல. 1.1, 1.2 ஆகியவற்றின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

**பொதுவான நிபந்தனைகள்:**

- விண்ணப்பகாரர், வகுப்பு III இன் உரிய தரத்திற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய காலப்பகுதியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- தேர்தல் ஆணைக்குழுவில் குறைந்தபட்சம் 03 வருடங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு பணியாற்றுவதற்கு உடன்படுதல் வேண்டும்.

- தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடமாற்றம் பெற்று வரும்போது அலுவலரின் அடிப்படைச் சம்பளத்தில் 25% மேலதிக படியொன்று மாதாந்தம் செலுத்தப்படும்.

- தாபன விதிக்கோவையின் XXXII அத்தியாயத்தின் பிரிவு 1.1 இற்கமைய தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்களல்லர்.

- விண்ணப்பகாரரின் குடும்ப உறுப்பினரொருவர் அல்லது வாழ்க்கைத்துணையின் குடும்ப உறுப்பினரொருவர் செயற்படு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிராதவராக இருத்தல் வண்டும்.

- தேர்தலொன்று நடைபெறும் காலப்பகுதியில் பொதுவான கடமை நேரத்திற்கு மேலதிகமாக வாராந்த நாட்களிலும் அரசாங்க பொது விடுமுறை நாட்களிலும் உரிய கடமைகளை நிறைவேற்றல் வேண்டும்.

- ஒப்படைக்கப்படும் கடமைகளை ஆற்றுவதற்கு நாட்டின் எந்தவொரு தேர்தல்கள் அலுவலகத்திற்கும் செல்லல் / வருதல் வேண்டும்.

- கடமை சார்ந்த குறுகிய கால பயிற்சியொன்றைத் தொடர்ந்து தமது பணிகளை சுயாதீனமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்குரிய ஆற்றலுடையவராக இருத்தல் வேண்டும்.

- கடமையின் தேவை நிமித்தம் ஆங்கிலமொழியை திருத்தமான முறையில் கையாளக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்:**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி தற்போது பணியாற்றும் தாபனத் தலைவரின் அனுமதியுடன் தங்களது சுயவிபரக்கோவையை இணைத்து 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அக்கடிதவுறையின் இடதுபக்க மேல்மூலையில் **"தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு"** என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**
**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் உரிய தகைமைகள் குறித்து பரீட்சிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பகாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

அதற்கமைய நேர்முகப் பரீட்சைக் குழாமினால் திறமைகள் பரீட்சிக்கப்பட்டு தகுதியான அலுவலர்களை ஆட்சேர்ப்புசெய்வதற்கு விண்ணப்பகாரரின் தாபனத் தலைவருக்கும் பிரதியொன்றுடன் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத யாதேனுமொரு விடயம் இருப்பின், தேர்தல் ஆணைக்குழு அது சம்பந்தமான இறுதி முடிவை எடுக்குமென்பதுடன் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கமைய செயலாற்றுவதற்கு விண்ணப்பகாரர்கள் யாவரும் கடப்பட்டவர்களாவர்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2022 டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி

**தேர்தல் ஆணைக்குழு - இடமாற்றக் கோரிக்கை விண்ணப்பப்படிவம் (பதிலாள் இன்றிய அடிப்படையில்)**

| பதவி | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | வகுப்பு | |
|---|---|---|---|

**அ. தனிப்பட்ட தகவல்கள்**

| | | |
|---|---|---|
| 01. முழுப் பெயர் : | | |
| 02. முதலெழுத்துக்களுடனான பெயர் : | | |
| 03. பிறந்த திகதி : *(வருடம் / மாதம் / நாள்)* | 04. வயது : (2023.01.25 ஆம் திகதிக்கு) *(வருடம் / மாதம் / நாள்)* | 05. பால்நிலை: பெண் ☐ ஆண் ☐ |
| 06. தேசிய அடையாள அட்டை இல. | | |
| 07. பிரத்தியேக மின்னஞ்சல் முகவரி: | 09. நிரந்தர முகவரி : | 10. தற்காலிக முகவரி: |
| 08. கையடக்கத் தொலைபேசி இல : | | |
| 11. திருமண நிலை : திருமணமானவர் ☐ திருமணமாகாதவர் ☐ | 12. திருமணமானவராயின், வாழ்க்கைத்துணையின் பெயர் : | 13. வாழ்க்கைத்துணையின் தொழிலும் தொழில் புரியும் இடமும் : |

**ஆ. சேவை பற்றிய தகவல்கள்**

| | |
|---|---|
| 14. தற்போது சேவையாற்றும் இடம்: | 15. சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா? ஆம் ☐ இல்லை ☐ |
| 16. சேவையாற்றும் இடம் அமைந்துள்ள மாவட்டம் / நகரம்: | 17. அலுவலகத் தொலைபேசி இல: |

| 18. தற்போது வகிக்கும் பதவியில் சேவைக் காலம்: *(2023.01.25 ஆம் திகதிக்கு)* | 19. பிரதிலாபம் அடையக்கூடிய தொழில் இடமொன்றில் சேவையாற்றியுள்ளீரா? ஆம் ☐ இல்லை ☐ | 20. பிரதிலாபம் அடையக்கூடிய தொழில் இடமொன்றில் சேவையாற்றி இருப்பின், எத்தனை வருடங்கள் சேவையாற்றியுள்ளீர்கள்? |
|---|---|---|
| | | |

| 21. அரசாங்க சேவையில் இதற்கு முன்பு சேவையாற்றிய இடங்கள் : | | **தொழில்புரிந்த இடம்** | **பதவி** | **சேவைக் காலம்** | |
|---|---|---|---|---|---|
| | | | | **இலிருந்து** | **வரை** |
| | 1. | | | | |
| | 2. | | | | |
| | 3. | | | | |
| | 4. | | | | |

சமீபத்தில் தயாரித்த சுயவிபரக்கோவையுடன் தகவல் தொழில்நுட்பப் பாவனை பற்றிய பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

………………………………

…………..……………………….………..

திகதி கையொப்பம்

**இ. அமைச்சு/ திணைக்களத் தலைவரின் சிபார்சு :**

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலரின் இடமாற்றக் கோரிக்கையை பதிலாளின்றிய அடிப்படையில் சிபார்சு செய்கின்றேன். தேர்தல் ஆணைக்குழுவின் நேர்முகப் பரீட்சைக் குழாமினால் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்துள் குறித்த அலுவலரை விடுவிப்பதற்கு உடன்படுகின்றேன் / உடன்படவில்லை.

……………………………… …………..……………………….……………

திகதி கையொப்பம்

*(பதவி இலச்சினை)*

**குறிப்பு:**
தேவைப்படும் இடங்களில் ☑ அல்லது ☒ என்ற குறியீட்டை இடவும்.